**தமிழ்நாடு அரசு**

# இந்து சமய அறநிலையத்துறை
# உதவி ஆணையர் அலுவலகம், செங்கல்பட்டு

## வேலை வாய்ப்பு விளம்பரம் அறிவிப்பு

**கட்டு எண்.1104/2021/அ1** **நாள்.21.03.2022**

செங்கல்பட்டு, உதவி ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும். பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| வ. எண் | பணியிடம் | எண்ணிக்கை | ஊதிய விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | ஓட்டுநர் | 1 (ஒன்று) | 19500 - 62000 | 1. 8 ம் வகுப்பு தேர்ச்சி<br>2.LMV License with Batch<br>3.நல்ல உடல் தகுதியுடன் இருக்க வேண்டும் |
| 2. | அலுவலக உதவியாளர் | 2 (இரண்டு) | 15700 - 50000 | 1. 8 ம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | இரவு காவலர் | 1 (ஒன்று) | 15700 - 50000 | 1. 8 ம் வகுப்பு தேர்ச்சியின்மை<br>(மிதி வண்டி ஓட்டத் தெரிந்தவராகவும் நல்ல உடல் தகுதியுடனும் இருத்தல் வேண்டும்) |

முன்னுரிமை

1.ஓட்டுநர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி முன்னுரிமை அற்றவர்.
2.அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி முன்னுரிமை பெற்றவர் **(General Priority)** தாழ்த்தப்பட்டவர் (அருந்ததியர்), ஆதரவற்ற விதவை **(Destitute Widow)** ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3.இரவுக்காவலர் பணியிடத்திற்கு பொதுப்போட்டி முன்னுரிமை அற்றவர்.

| 01.07.2021-ல் வயது வரம்பு | SC/ST | GT | MBC/DNC | BC |
|---|---|---|---|---|
| அதிக பட்ச வயது | 37 | 32 | 34 | 34 |
| குறைந்த பட்ச வயது | 18 | 18 | 18 | 18 |
| *அரசு விதிகளின்படி வயது வரம்பு தளர்வு அனுமதிக்கப்படும். | | | | |

மேற்கூறிய தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் 22.04.2022 மாலை 5.30 மணிக்குள் கீழ்காணும் ஆவணங்களின் நகல்களில் சான்றிட்டும்,புகைப்படத்துடன் சுயவிலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலை ஒட்டிய கவர் ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு உரிய விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், கைபேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும், அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர் விண்ணப்பக் கவரில் "அலுவலக உதவியாளர்" பணியிடம் என்றும்/இரவுக்காவலர் பணியிடத்திற்கு "இரவுக்காவலர்" என்றும், "ஓட்டுநர்" பணியிடத்திற்கு ஓட்டுநர் என்றும் பணியிடம் குறிப்பிட்டு அனுப்பப்படவேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

<u>இணைத்துஅனுப்ப வேண்டிய விபரங்கள்</u>

1)விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி. (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
2)எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான / பெறாததற்கான கல்வி சான்று நகல்
3)ஓட்டுநர் உரிமம்
4)பள்ளி மாற்று சான்று நகல்
5)சாதிச் சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
6)செங்கல்பட்டு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு சான்றின் நகல்
7)மின்னணு குடும்ப அட்டை **(Smart card)** நகல்
8)முன்னுரிமைக்கான சான்றின் நகல் (priority Certificate)
9)இதர தகுதிகள் ஏதுமிருப்பின் அதன் விபரம் மற்றும் நகல்கள்
10)சுய விலாசமிட்ட ரூ.25/-க்கான தபால் தலையுடன் கூடிய உரை - 1.

**குறிப்பு :**

விண்ணப்ப படிவம் அலுவலக விளம்பர பலகை மற்றும் **www.tnhrce.gov.in website**-ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

உதவிஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை,
நெ.228, ஜே.சி.கே.நகர், முதன்மைச் சாலை
(ஏழுமலை கல்யாண மண்டபம் அருகில்), செங்கல்பட்டு - 603 001.

**உதவி ஆணையர்,**
**இந்துசமய அறநிலையத்துறை,**
**செங்கல்பட்டு**

**வெ.ஆ.எண். 18/2022/செ.ம.தொ.அ/செங்கல்பட்டு/நாள் : 22.03.2022**

**" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**